RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt20417

OPEN ACCESS

# மடவோர் குழவி கைவிட்டாங்கு - பன்முக மெய்ப்பாட்டாய்வு

## ம. ஜவகர் [அ, *], இரா. சம்பத் [அ]

[அ] மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி இந்தியா

# Madavor Kulavi Kaivittangu - Multidimensional verisimilitude

## M. Jawahar [a, *], R. Sambhath [a]

[a] Pondicherry institute of linguistics and culture, Puducherry, India

* Corresponding Author: jawaharm@gmail.com

Received : 03-07-2020
Accepted : 08-09-2020

Check for updates

### ABSTRACT

The main purpose of this paper is to analyse and approach the various realities that can be felt in a poem. There is a great relationship between the metaphor and the metaphor. The purpose of this essay is to depart from the central theme and examine the times and people. The fifteenth song of the nursery beginning "Muzhanguthirai kozhiya moori ekkar" is the data for this article.

**Keywords:** Poem, Sangam Age, Madavor Kulavi Kaivittangu

## முன்னுரை

ஒரு பாடலில் பல மெய்ப்பாட்டை உணர முடிகிறது அத்தகைய பல்வேறு மெய்பாடுகளைப் பகுத்து அணுகுவதே இவ்வாய்வுக் கட்டுரையின் முதன்மை நோக்கமாகும். செய்யுள் உறுப்பான மெய்ப்பாடுக்கும் உவமைக்கும் ஒரு பெரும் உறவுண்டு. மையக் கருத்தை விட்டு சற்று விலகி காலங்கள், மாந்தர்களை வைத்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ”முழங்குதிரை கொழிஇய மூரி எக்கர்“ எனத் தொடங்கும் நாற்றிணையின் பதினைந்தாவது பாடல் இக்கட்டுரைக்கான தரவாகும்.

நாற்றிணையின் பதினைந்தாவது பாடல்

பாடல், பாடலின் சூழலம், அதன் பொருளும் வருமாறு:

”முழங்குதிரை கொழீஇய மூரி எக்கர்
நுணங்குதுகில் நுடக்கம் போலக் கணங்கொள
ஊதை தூற்றும் உரவுநீர்ச் சேர்ப்ப!
பூவின் அன்ன நலம்புதிது உண்டு
நீயுணர்ந் தனையே அன்மையின் யாமே
நேர்புடை நெஞ்சம் தாங்கத் தாங்கி
மாசில் கற்பின் மடபோள் குழவி

ஒய்ய வாங்கக் கைவிட் டாங்குச்

சேணும் எம்மொடு வந்த

நாணும் விட்டேம் அல்கஇவ் வூரே"

இப்பாடல் நெய்தல் திணைக்குறியது. தோழி கூற்றாக அமைந்தது; அறிவுடைநம்பி பாடியது; இது வரைவு நீட்டித்த வழித் தோழி தலைமகற்குச் சொல்லி வரைவுகடாயது எனும் துறையைச் சேர்ந்தது. தலைவனும் தலைவியும் தனியிடத்து எதிர்பாரா நிலையில் இயற்கைப் புணர்ச்சி நிகழ்கிறது. தலைவியைக் கூடிய தலைவன் களவு ஒழுக்கத்து பின் மனம் செய்துகொள்ளாமல் காலம் தாழ்த்துகிறான். தோழியின் மூலமாக தலைவியின் நிலை தலைவனிடம் உணர்த்தப்படுகிறது.

இவ்வாறு வரைவுகடாயது தலைவனிடம் தலைவியின் நிலையைச் சொல்லும் நிகழ்வாக இப்பாடல் அமைந்துள்ளது. இப்பாடலின் பொருள் வருமாறு: அந்த காட்சி துகிலின் நுடக்கம் போல இருகின்றது. அதுபோல் நீர் வலமை கொண்ட கடற்கரைத் தலைவன், மலர் அந்த உயர் இன்பத்தை உணராது துன்பம் தருகின்றாய்! நன்றி மறந்தாய்! அதனை ஏற்றுக் குற்றமற்ற கற்பினள் தன் குழந்தையைப் பலி கொடுப்பதற்காக மற்றொருவர் வாங்க. அதனை அறியாது கைவிட்டது போல எம்முடன் என்றும் மெய்யில் தங்கிய நாணும். கைவிட்டோம் இனி இவ்வூர் மக்கள் அலர் தூற்றி நிற்பர்.

தூய்மையான கற்பினள் தன் குழற்தையைப் பலி கொடுப்பதற்காக மற்றொருவர் வாங்க அதனை அறியாது கைவிட்டது போல தோழி தலைவனிடம் களவு வாழ்க்கையில் தலைவியை இழந்த நிலையே இப்பாடலின்; உவமை கருத்து வெளிப்படுத்துகின்றது.

மேலே குறிப்பிட்டுள்ள பாடலில் வெளிப்பட்டுள்ள மெய்ப்பாட்டினை மூன்று தன்மைகளின் அடிப்படையில் பகுத்து ஆராயலாம். அவை

1. காலம்
2. மாந்தர்
3. உவமை

## காலம்

இலக்கணத்தில் காலம் என்பது, ஒரு செயல் எப்பொழுது நடைபெறுகிறது என்பதைக் காட்டும் இலக்கண கூறாகும். ஒரு செயலி முன் நிகழ்வு, நடப்பு நிகழ்வு, பின் நிகழ்வு என்பதைக் குறித்துக் காட்டுவதே காலமாகும். அவை

1. இறந்தகாலம்
2. நிகழ்காலம்
3. எதிர்காலம்

### 1. இறந்தகால மெய்ப்பாடு

இப்பாடலின் முன் நிகழ்வில் தோன்றியுள்ள மெய்ப்பாட்டை இறந்தகால மெய்ப்பாடு எனலாம். இப்பாடலின் இறந்தகால மெய்ப்பாடு தலைவன் தலையியை சேர்ந்ததால் "உவகை" மெய்ப்பாடாக அமைகின்றது.

"பூவின் அன்ன நலம்புதிது உண்டு"

இப்பாடல் வரைவுகடாய துறையை சார்ந்தது. இப்பாடலில் முன் நிகழ்வாக தலைவனும் தலைவியும் இயற்கை புணர்ச்சி மேற்கொண்ட சான்று உள்ளது. அது பூ வோடு தலைவியை உவமைப்படுத்தி, அத்தகைய பூவை நுகர்ந்த தலைவன் என முன்னார் நடந்த புணர்ச்சி நிகழ்வை உணர்த்துவதாக அமைகின்றது. இதன் மூலம் "பணர்ச்சி" நிலைக்களன் கொண்டு "உவகை" மெய்ப்பாட்டை வெளிப்படுத்துகின்றது. இதை இப்பாடலில் இறந்தகால மெய்ப்பாடாக கொள்ளலாம்.

## 2. நிகழ்கால மெய்ப்பாடு

நிகழ்கால மெய்ப்பாடு என்பது செய்யுளின் மையக் கருத்தே ஆகும். இப்பாடலில் "இளிவரல்" மெய்ப்பாடு வெளிப்படுகின்றது.

"நீயுணர்த் தனையே அன்மையின் யாமே

நேர்புடை நெஞ்சம் தாங்கத் தாங்கி"

இறந்தகாலத்தில் நடைபெற்ற நிகழ்வை தோழி தலைவனிடம் உரைப்பதே என்ற கூற்று கருத்து. நீ தலைவியிடம் இன்பம் துய்த்தாய். ஆனால் தற்போது காலம் கடத்தி எங்களைத் துன்பத்தில் ஆழ்த்துகிறாய் "வருத்தத்தை" நிலைக்களனாக கொண்டு இளிவரல் என்பது நிகழ்கால மெய்ப்பாடாகின்றது.

## 3.எதிர்கால மெய்ப்பாடு

இப்பாடலில் இறந்தகாலம் அல்லது நிகழ்கால தன்மைக்கேற்ப எதிர்கால மெய்ப்பாடு தோன்றுவதை அறிய முடியும்.

"அலர்கஇவ் வூரே"

என்ற இவ்வரியில் மூலம் இப்பாடல் முடிவு பெற்றுள்ளது. தலைவனும், தலைவியும் இயற்கை புணர்ச்சி மேற்கொண்ட நிகழ்வுக்கு பின், வரைவிற்கு காலம் தாழ்த்துகின்றான். இந்நிலையில் தலைவன் தலைவி களவு வாழ்க்கை ஊர் மக்களுக்குத் தெரிந்தால் மக்கள் அலர் தூற்றி நிற்பர். இதன் மூலம் தலைவியை ஊரார் இகழப்படும் அவல நிலைஏற்படும். இத்தகைய தன்மையை இளிவு" நிலைக்களனை கொண்ட "அழுகை" என்னும் எதிர்கால மெய்ப்பாடு தோன்றும் தன்மையை அறியலாம்.

## மாந்தர்களின் மெய்ப்பாடு

சங்க இலக்கியங்கள் மாந்தர்களை அடிப்படையாக கொண்டே அனைத்து பாடல்களும் அமைந்துள்ளன. அந்த நிலையில் மேலே குறிப்பிட்டுள்ள பாடலில் தலைவன், தலைவி, தோழி முதலிய மாந்தர்களிடம் தோன்றும் மெய்ப்பாடுகளைத் தனித்தனியாக ஆராய்வதையே மாந்தர்களின் மெய்ப்பாடு என்பதாக அமைத்தக்கொள்ளலாம்.

1. தலைவன்
2. தலைவி
3. தோழி

## 1. தலைவன் வழி மெய்ப்பாடு

தலைவனை அறிமுகம் செய்வதற்கு நெய்தல் திணையின் காலத்தினால் அழியா செயல் தன்மையை தலைவன் வழி வெளிப்படுத்தியுள்ளது.

"முழங்குதிரை கொழீஇய மூரி எக்கர்

நுணங்குதுகில் நுடக்கம் போலக் கணங்கொள

ஊதை தூற்றும் உரவுநீர்ச் சேர்ப்ப"

இத்தொடர் முழங்குதின்ற அலைகள், அவை கொண்டு சேர்ப்பிக்கும் மணல்கள் அந்தக் காட்சி துகிலின் நுனுக்கம் போல உள்ளது. அத்தகைய நீர் வலிமை கொண்ட கடற்கரைத் தலைவனை மையமாக கொண்டு புலவர் நிலத்தைப் புகழ்கின்றார். இதில் புகழ் தன்மையை நிலைக்களானாகக் கொண்ட பெருமித மெய்ப்பாட்டை நெய்தல் திணைக்கு தலைவன் வழியே வெளிப்படுத்தியுள்ளார்.

## 2. தலைவி வழி மெய்ப்பாடு

தலைவியின் மெய்ப்பாட்டு நிலைக்களனை தோழி மூலம் புலவர் உணர்த்துகிறார்.

"பூவின் அன்ன நலம்புதிது ண்டு

நீயுணர்ந் தனையே அன்மையின் யாமே,

நேர்புடை நெஞ்சம் தாங்கத் தாங்கி"

இத்தொடரில் பூப் போன்ற என் தலைவியின் நலன் புதுவதாக நுகர்ந்தாய், அத்தகைய உயர் இன்பத்தை உணராது வரைவுநீடித்து தலைவி "வருந்துவதால்" இதில் "இளிவரல்" மெய்ப்பாடு தோன்றுகின்றது.

## 3. தோழி வழி மெய்ப்பாடு

இந்தப் பாடல் தோழி மூற்று என்பதால் தோழியை மையமாக வைத்தே அமைகின்றது. தலைவியின் வருத்தம் எண்ணி தோழி தலைவனிடம் பெகுளி மெய்ப்பாடு தோன்ற வேண்டிய நிலையில் அதற்கு மாறாக தலைவியுடன் அவளும் வருத்தப்படுவதால். "வருத்தத்தை" நிலைக்களனாகக் கொண்டு "இளிவரல் மெய்ப்பாடு" தோன்றுகிறது. தலைவியின் வருத்தமே தோழமையின் தன்மையை கொண்டுள்ளது.

## 4. உவமை வழி மெய்ப்பாடு

மெய்ப்பாடுக்கும் உவமைக்கும் ஒரு பெரும் உறவுண்டு, அவ்வாகையில் இப்பாடலின் உவமையில் மறைந்துள்ள மெய்ப்பாட்டைக் காண்போம்.

"மாசில் கற்பின் மடவோள் குழவி

ஒய்ய வாங்கக் கையிட்டாங்குச்

சேணும் எம்மோடு வந்து"

இத்தொடரில் தூய்மையான கற்பினையுடைய பெண்ணின் குழந்தையைப் பலி கொடுப்பதற்காக மற்றொருவர் வாங்க அதனை அறியாது குழந்தையைக் கொடுப்பது போல எம்முடன் என்னும் மெய்யில் தங்கி நாணும் கைவிட்டோம்.

| | | |
|---|---|---|
| **உவமை** | - | **மாந்தர்** |
| தூய்மையான கற்பினை கொண்ட தாய் | - | தோழி |
| பலி கொணடக்க இருக்கும் குழந்தை | - | தலைவி |
| பலி கொடுக்க பெறுபவர் | - | தலைவன் |
| பலி என்னும் நிகழ்வு | - | புணர்ச்சி |

இந்த விளக்கத்தில் குழந்தையைப் பலி என்னும் பெயரில் கொலை செய்யும் தொழிலை செய்பவனாக தலைவனை உவமைப்பாடுத்தி காட்டுவதன் மூலம் தோழி கடிந்துரைக்கின்றாள். இதன் மூலம் தோழியின் வெகுளி மெய்ப்பாட்டையும் அலை நிலைக்களனையும் அறிய முடிகின்றது. தோழி தலைவனைக் கடிந்துரைக்கததன் மூலம் "இளிவு" என்னும் நிலைக்களன் கொண்டு "ஆழுகை" மெய்ப்பாடு தலைவனுக்குத் தோன்றுகிறது.

## முடிவுரை

இலக்கியத்தில் இடம்பெறும் உணர்ச்சிகளைக் கற்போர்க்குப் புரியும் வகையில் எடுத்துரைக்கும் கருவியே மெய்ப்பாடு. சில மாற்றத்தோடு இவ்வாய்வுக் கட்டுரை அமைக்கபட்டுள்ளது. மையக் கருத்தை விட்டு சற்று விலகி காலங்கள் வழி, நாந்தர்கள் வழி, உவமை வதழியாக பல மெய்ப்பாடுகள் தோன்றும் தன்மையை உணர்த்துவதாக அமைகின்றது.

## References

Narayanasamy Ayyar, A. (1952) Natrinai, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India

Silambu Selvarasu, N. (2016) Sanga Ilakiya Maru Vasipu, Kaviya Pathippagam, Chennai, India

Vellavarayanar, K. (1986) Tholkapiyam Meipattiyal, Madurai Kamarajar University, Madurai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2020. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License